# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.31 /2017**

திரு. M. தியாகராஜன்,
த/பெ. மாசி நாயக்கர்,
சாலைப்பாளையம்,
நடந்தை – 637 206

. . . . மேல் முறையீட்டாளர்
(திரு. ராசப்பன்)

எதிர்

உதவி பொறியாளர் / இ&ப,
நடந்தை,
நாமக்கல் மின்பகிர்மான வட்டம் ,
நடந்தை அஞ்சல்,
பரமத்தி வேலூர்–637 206.

. . . . . எதிர்மனுதாரர்
(திரு. சு. சரவணக்குமார்/உதவி பொறியாளர்/நடந்தை)

**ஆணை நாள் : 4.7.2017**

1. திரு. எம். தியாகராஜன், த/பெ. மாசிநாயக்கர், சாலைப்பாளையம் அவர்களின் 13.04.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.31/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண் 234–011–1661 ன் மின் கட்டண வீதப்பட்டியை V லிருந்து III A(1) ஆக மாற்றம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் 10 நாட்களுக்குள் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 21.04.2017 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது. பிறகு எதிர்மனுதாரரின் வேண்டுகோளுக்கு இணங்க பதிலுரையை சமர்பிக்க மேலும் 20 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டது.

4. எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையை 12.06.2017 அன்று சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.06.2017 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

6. கேட்புரை நாளன்று மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திரு கே.ராசப்பன் அவர்கள் கலந்து கொண்டு மேல்முறையீட்டாளரின் தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. எதிர்மனுதாரர் திரு.சு. சரவணகுமார், உதவி பொறியாளர்/நடந்தை அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

8. இதனிடையே, மேல்முறையீட்டாளர், தனது 28.06.2017 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் எதிர்மனுதாரர் சமரச அடிப்படையில் பட்டியல் விகிதம் மாற்றம் செய்து விட்ட காரணத்தால் மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். அந்த 28.06.2017 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“பார்வை – என்னுடைய மனு எண்.31/2017*

*என்னுடைய மின் இணைப்பு எண் **04–234–011–1661** பட்டியல் விகிதம்* V ஐ பட்டியல் III A-1 *ஆக மாற்றம் சம்பந்தமாக சமரச அடிப்படையில் பட்டியல் விகிதம் மாற்றம் செய்து விட்ட காரணத்தால் மேற்கண்ட பார்வையிலுள்ள என்னுடைய மனுவை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் ”*

9. மேல்முறையீட்டாளர், தனது 28.06.2017 நாளிட்ட கடிதத்தில் எதிர்மனுதாரர் சமரச அடிப்படையில் பட்டியல் விகிதம் மாற்றம் செய்து விட்ட காரணத்தால் மனுவை திரும்ப

பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளதால், மேல்முறையீட்டு மனு எண்.31/2017 இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு.M. தியாகராஜன்,
த/பெ. மாசி நாயக்கர்,
சாலைப்பாளையம்,
நடந்தை – 637 206

2) உதவி பொறியாளர் / இ&ப,
நடந்தை,
நாமக்கல் மின்பகிர்மான வட்டம் ,
நடந்தை அஞ்சல்,
பரமத்தி வேலூர்–637 206.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
நாமக்கல் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாமக்கல்

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.